# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • ஜூலை 27, 2019

Weekly E-paper • JULY 27, 2019





# மெத்தப் படித்த மேதாவிகளிடம் நான்கு வினாக்கள்!

சுப.வீரபாண்டியன்





## வெளிச்சத்தை வெறுக்கும்...

மா.உதயகுமார்

## வேண்டாம் குரங்குச் சேட்டை!

தலையங்கம்



## கோல்வால்கரின் முகமூடி

கோ.மால்மருகன்

கருஞ்சட்டைத் தமிழர்
ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்
வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2050 ● ஜூலை 27, 2019 Weekly E-paper ● JULY 27, 2019

# மெத்தப் படித்த மேதாவிகளிடம் நான்கு வினாக்கள்!

● சுப.வீரபாண்டியன்

பொருளாதாரத்தில் நலிவடைந்த முன்னேறிய சாதியினருக்குப் பத்து விழுக்காடு இடஒதுக்கீடு என்ற சட்டம் நிறைவேறியபோதே, இது சமூக நீதிக்கு எதிரானது என்று தமிழகம் உரத்துச் சொன்னது. அது இப்போது உண்மையாகி விட்டது.

அந்தச் சட்டம் நிறைவேறியபின் வெளிவந்துள்ள வங்கித் தேர்வு முடிவுகள் பேரதிர்ச்சியாய் உள்ளன. இந்திய அரசு வங்கி (ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா)ப் பணிகளுக்கான முதல்நிலைத் தேர்வில் பெறவேண்டிய குறைநிலைத் தகுதி மதிப்பெண்ணை (கட் ஆப் மார்க்) அவ்வங்கி வெளியிட்டுள்ளது. அதன் படி, பொதுப்போட்டியில் பங்கேற்போர் (ஓசி), பிற்படுத்தப்பட்டோர்(பிசி), தாழ்த்தப்பட்டோர்(எஸ்சி) அனைவரும் குறைந்தது 61.25% மதிப்பெண்களாவது பெற்றிருந்தால்தான், இறுதித்தேர்வுக்கு அவர்கள் செல்ல முடியும். மலைவாழ்மக்கள்(எஸ்டி) கூட 53.75% மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். ஆனால், மாதம் 65000 ரூபாய் ஊதியம் பெறும் ஏழைகளான (!) முன்னேறிய வகுப்பினர் 28.5% மதிப்பெண்கள் பெற்றாலே போதும், இறுதித் தேர்வுக்குச் சென்றுவிடலாம்.




இப்படி ஒரு சமூக அநீதி நம்நாட்டில் இழைக்கப்பட்டுள்ளது. இப்போதும் தமிழகம் தவிரப் பிற மாநிலங்கள் அமைதியாகவே இருக்கின்றன.

இங்கே நான்கு வினாக்களை மட்டும் நாம் முன்வைக்கிறோம். .

1. அனைத்து வங்கிகள் பணியாளர் தேர்வுக்கும், ஊழியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு IBPS (Institute of Bank Personnel Selection Committee) என ஒன்று இருக்கும்போது, இந்திய அரசு வங்கிக்கு மட்டும், தனித்த தேர்வுக் குழு எதற்காக?

2. இறுதிநிலைத் தேர்வுக்குத்தான் தகுதி மதிப்பெண் (Qualifying mark) உண்டு, முதல்நிலைத் தேர்வுக்கு அது கிடையாது என்னும்போது, தகுதி மதிப்பெண்ணே இல்லாத இடத்தில், குறைநிலைத் தகுதி மதிப்பெண் எங்கிருந்து வந்தது?

3. 10% இடஒதுக்கீடு செல்லாது என்று உச்சநீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருக்கும் வழக்கு, வரும் 30 ஆம் தேதி மீண்டும் விசாரணைக்கு வர இருக்கும் வேளையில், இந்தத் தேர்வு முடிவுகளை இவ்வளவு அவசரம் அவசரமாக வெளியிட வேண்டிய தேவை என்ன? ஒருவேளை, உச்சநீதிமன்றம், இடைக்காலத் தடை விதித்து விடுமோ என்ற அச்சமே காரணமா? அதற்குள் முடிந்தவரை தங்கள் ஆள்களை உள்ளே கொண்டுவந்து விடலாம் என்ற துடிப்பா? ‘பலித்தவரை...என்பதுதான் பார்ப்பனியம்’ என்று எங்கள் அய்யா பெரியார் சொன்னது இப்போது மெய்ப்பிக்கப்படுகின்றதா?

4. மலைவாழ் மக்களின் பிள்ளைகள் வாங்கியுள்ள மதிப்பெண்களில் கூடப் பாதியைத்தான் எட்ட முடிந்துள்ளது என்றால், இதுவரையில் வாய்கிழியப் பேசிவந்த முன்னேறிய சாதியினரின் ‘தகுதி, திறமை’ என்பதெல்லாம் நூற்றுக்கு நூறு பொய்தானே?

இன்னும் பல வினாக்கள் இருக்கின்றன. இப்போதைக்கு இந்த நான்கு வினாக்களுக்கு மட்டுமாவது, மெத்தப் படித்த மேதாவிகள் யாருமிருப்பின் விடை சொல்லட்டும்! ●

## ‘சிங்க’ ராயருக்கு நன்றியும் பாராட்டும்





கடந்த 28 ஆண்டுகளாகச் சிறையில் இருந்துவரும் நளினிக்கு, நீதிமன்றம், அவருடைய மகள் திருமணத்தையொட்டி, ஒருமாத காலம் பரோலில் விடுப்பு தந்துள்ளது.

அவர் இப்போது, வேலூர், சத்துவாச்சாரியில் உள்ள, நம் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் மாநிலத் துணைப் பொதுச்செயலாளர் தோழர் சிங்கராயர் இல்லத்தில் தங்கியுள்ளார். அவர் தங்குவதற்கு இடம்கொடுக்க, எல்லோரும் தயங்கிய வேளையில், அவரை இதற்குமுன் சந்தித்துமிராத தோழர் சிங்கராயரும், அவர் குடும்பத்தினரும் தங்கள் வீட்டில் தங்க இடம்தந்து வரலாற்றில் இடம் பெற்றுக் கொண்டனர்.

பேரவையின் பொதுச்செயலாளருடன் பேசி, ஒப்புதலைப் பெற்றபின்பு, தங்கள் இல்லத்தில் தங்க இடம் தந்த அவருக்கும், அவர் குடும்பத்தினருக்கும், பேரவையின் சார்பில், நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தங்கள் செய்கையால், பேரவைக்குப் பெருமை தேடித் தந்துள்ள அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்!

# வெளிச்சத்தை வெறுக்கும் பா.ஜ.க

● மா.உதயகுமார்


‘திருத்தம்’ என்ற சொல்லுக்குப் பொதுவான பொருள், தவறாக இருப்பதைச் சரிசெய்வது என்பதாகும். ஆனால் மத்தியில் இருக்கும் பா.ஜ.க அரசோ, சரியாக இருப்பனவற்றையெல்லாம் தவறானவையாக மாற்றித் ‘திருத்தம்’ என்ற சொல்லுக்கான பொருளையே திருத்தியிருக்கிறது.

நடந்து வரும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் பா.ஜ.க அரசு அவசர அவசரமாகச் செய்திருக்கும் சட்டத் திருத்தங்கள் யாவும் மக்களுக்குத் தேவையற்றவைகளாகவே இருக்கின்றன. ஆனால் அவை சங்பரிவாருக்குத் தேவைப்படுகின்றன. இச்சட்டத் திருத்தங்கள் மக்களுக்குத் தேவையற்றவைகளாக மட்டுமன்று, பேராபத்தை விளைவிப்பனவாகவும் இருக்கின்றன.

அண்மையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் திருத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. ‘*Chief Information Commissioner*’ என்று சொல்லப்படும் தலைமைத் தகவல் ஆணையர் மற்றும் ‘*Central and State Information Commissioners*’ என்று சொல்லப்படும் மத்திய மாநிலத் தகவல் ஆணையர்கள் அனைவருக்குமான பதவிக் காலம், ஊதியம் உள்ளிட்டவற்றைத் தீர்மானிக்கும் உரிமையை மத்திய அரசு இச்சட்டத் திருத்தத்தின் மூலம் எடுத்துக்கொண்டிருக்கிறது.

இதற்கு முன் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 இன் படி மத்தியத் தலைமைத் தகவல் ஆணையருக்குத் தேர்தல் ஆணையருக்கு இணையான அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. இந்த அதிகாரத்தை மத்திய அரசு பறித்துக் கொண்டுள்ளது. தன்னாட்சி பெற்ற தேர்தல் ஆணையத்தின் செயல்பாட்டில் காவியாட்சி நடைபெறுவதை நாம் சென்ற தேர்தலிலும், தேர்தல்களை அறிவிக்கும் போக்கிலும் பார்த்தோம். தற்போது அந்த உரிமையும் இல்லாமல் போனால் நேரடியாகத் தாங்களே ஆணையத்தை நடத்திக் கொள்ள எளிதாக இருக்குமல்லவா?

ஆட்சியைத் தொடங்குகிறார்கள், அதனால்




முதலிலேயே பிரச்சினை தருவனவற்றையெல்லாம் எளிதாக்கிக் கொண்டால் ஆட்சியில் பிரச்சினைகள் ஏற்படாது அல்லவா? பிறகு பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர் நியமனம் பற்றி யாராவது கேட்பார்கள். பார்ப்பனர்களே நிரப்பப்பட்டுள்ளனர் என்று அவர்களே வாக்கு மூலம் கொடுக்க வேண்டும். அதனால் சட்டத்தையே தங்கள் கைக்குள் வைத்துக்கொள்ள இந்த ஏற்பாட்டினைச் செய்துகொண்டார்கள். எதுவும் வெளிச்சத்திற்கு வந்துவிடக் கூடாது என்று யார் நினைப்பார்கள் என்பதை நாம் அறிவோம்.

மாநிலத் தகவல் ஆணையர்களுக்கு மாநில அரசு ஊதியம் கொடுக்கிறது. ஆனால் நிர்ணயமும் நியமனமும் மட்டும் மத்திய அரசு செய்யும். போகிற போக்கில் மாநில உரிமைகளையும் சேர்த்துப் பெயர்த்துக் கொண்டு போவது. வரவு, அதிகாரம் என்று வரும் போது அதனை முழுமையாக எடுத்துக் கொள்வது. செலவு என்று வரும் போது மட்டும் அதனை மாநிலங்கள் தலையில் கட்டி விடுவது. இவ்வளவு அற்பமான அரசைப் பார்ப்பது அரிதினும் அரிது.

இந்தத் திருத்தங்களால் தகவல் ஆணையத்தின் சுதந்திரம் பாதிக்கப்படுவதோடு, மக்களின் அடிப்படை உரிமைகளும் பாதிக்கப்படுகின்றன. இந்த சட்டத்திருத்தத்தினால், மற்ற அரசுத்துறைச் செயலாளர்கள் தகவல் ஆணையத்தின் ஆணையை மதிக்காத நிலைதான் உண்டாகும் என்று மத்திய தகவல் ஆணையத்தில் பணிபுரியும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதற்காகத்தானே ஆசைப்பட்டது பா.ஜ.க.

சூத்திரர்களுக்கு கல்வியைக் கொடுக்கக் கூடாது என்று சொன்னவர்கள், அவர்களுக்கு இருக்கும் தகவல் அறியும் உரிமையை மட்டும் விட்டுவைப்பார்களா? கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என்று சொன்னவர்கள், கணக்குக் கேட்டால் விட்டுவைப்பார்களா?

அதனால் தான் வந்ததும் வராததுமாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நீர்த்துப் போக வைப்பதற்கான முயற்சிகளில் இறங்கியிருக்கிறார்கள்.

●

ஆசிரியர்
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில். இளங்கோவன்

ஆசிரியர் குழு
தமிழ்மறவன்
உதயகுமார்
வெற்றிச்செல்வன்

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்
karunchattai@gmail.com

டுவிட்டர்
suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-2472 6408

## சென்னைக் கருத்தரங்கம்



21-07-2019 அன்று சென்னை, தேனாம்பேட்டை, அன்பகத்தில், திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சென்னை மாவட்டத்தின் சார்பில் நடைபெற்ற கருத்தரங்க மேடையில்,தயாநிதிமாறன் எம்.பி., பேரா.கருணானந்தன், தோழர்கள் பெல் ராஜன், எட்வின், கார்த்திக், ஜெயசூர் ஆகியோர்.

## நூல் வெளியீடு



23-07-2019 அன்று சென்னை, பாரிமுனை, ஒய்.எம்.சி.ஏ அரங்கில் நடைபெற்ற, 'காலத்தை வென்ற கலைஞர்' என்னும் நூலை வெளியிட்டு. தோழர் சுப.வீரபாண்டியன் உரையாற்றினார்.




தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## வேண்டாம் குரங்குச் சேட்டை!

குரங்கு தன் வாலை நீட்டி நீட்டி இழுத்துக் கொள்ளும் குணமுடையது. அதைவிட மோசமாக மத்திய பாஜக அரசு இந்தியை நீட்டி நீட்டி இழுத்துக் கொண்டிருக்கிறது தமிழகத்தில்.

இதற்குக் காரணம் தமிழர்களின் வலிமையான எதிர்ப்பு.

பல்வேறு மொழிகள் பேசும் மக்கள் வாழும் மாநிலங்களை அச்சுறுத்தும் எதேச்சாதிகாரமாய் இருக்கிறது இது.

இவ்வாண்டின் புதிய பாடத்திட்டத்தின்கீழ் 12-ஆம் வகுப்பு ஆங்கிலப்பாடத்தில், 142-ஆம் பக்கத்தில் சமஸ்கிருதத்தின் காலம் கி.மு. 2,000 என்றும் தமிழ்மொழியின் காலம் கி.மு.300 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மிகத் தொன்மையான மொழிகளுள் ஈப்ரூ, தமிழ், லத்தீன் ஆகியவைகளே முதன்மை பெற்றுள்ளன. இவைகளுக்குப் பின்னரே சமஸ்கிருதம் வருகிறது வரலாற்றில்.

கைபர் போலன் கணவாய் வழியாகக் கால்நடைகளை மேய்த்துக் கொண்டு ஆரியர்கள் இந்தியத் துணைக்கண்டத்தில் நுழைந்த காலம் கி.மு. 1,500. இதற்கு 500 ஆண்டுகளுக்குப் பின்னர் கி.மு. 1,000 ஆண்டில் உருவானது ரிக், யஜூர், சாம, அதர்வன (வேதம்) நூல்கள்.

அப்பொழுது சமஸ்கிருதம் எழுத்து வடிவம் பெறவில்லை.மேற்கண்ட நூல்களை உருவாக்கிய ஆரியர்கள் அப்பொழுது பேசிய மொழி 'ஆர்ய' என்ற ஒரு வகை பேச்சு மொழியே தவிர சமஸ்கிருதம் அன்று எனப் பேரறிஞர் அம்பேத்கர் குறிப்பிடுகிறார். சமஸ்கிருத மொழி எழுத்து வடிவம் பெற்றதே கி.மு. 1,000-த்திற்குப் பின்னர் என்பதே வரலாறு.

சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரைப்பாயிரம், இறையனார் அகப்பொருள் உரையின்படி தமிழ்மொழிக்கு ஏறத்தாழ 10,000 ஆண்டுகளுக்கு முன்பே சங்கம் வைத்து வளர்த்தவர்கள் தமிழர்கள். அப்பொழுதே தமிழ் வரி வடிவம் பெற்று நூல்களும் எழுதப்பெற்றுள்ளன என்பதும் தமிழர்களின் வரலாறு.

தாலமி, பிளினி, மெகஸ்தனிஸ் உள்ளிட்ட மேலை நாட்டவர்களின் நூல்களில் தமிழின் தொன்மையைப் பார்க்க முடிகிறது.

செம்மொழித் தமிழுக்கு இருக்கும் தொன்மை சமஸ்கிருததுக்கு இல்லை என்ற வரலாற்று உண்மையை மறைத்துவிட்டு, சமஸ்கிருதத்திற்கு கி.மு.2,000 என்றும், தமிழுக்கு கி.மு.300 என்றும் பொய்யான தகவலை மாணவர்கள் மத்தியில் கொண்டுசெல்வது நஞ்சுக்கு ஒப்பானது.


தொடக்கத்தில் இந்தி, இந்தி என்று சொல்லிக் கொண்டிருந்த பாஜக அரசு, இப்பொழுது சமஸ்கிருதத்தை விதைக்கத் தொடங்கிவிட்டது.

தமிழக அமைச்சர் செங்கோட்டையன் சொல்கிறார் இது ஏதோ தவறாக நடந்துவிட்டது என்று. இதுநாள் வரையிலும் தமிழுக்கு இப்படி ஒரு நிலை வராமல் இப்பொழுது மட்டும் தமிழக அரசுக்கு தெரியாமல் வந்தது எப்படி?

மத்திய மாநிலக் காவி அரசுகளை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

# மோடி - கோல்வால்கரின் முகமூடி

● கோ.மால்மருகன்



மோடி தலைமையிலான மத்திய அரசு, ஆர் எஸ் எஸ் (ராஷ்டரிய ஸ்வயம்சேவக் சங்க்) (சுருக்கமாக இனிமேல் 'சங்க்') அமைப்பின் இந்துத்வா சித்தாந்தம் மற்றும் வழி காட்டுதலின் அடிப்படையில் நடத்தப்படுகிறது என்பது நாம் அனைவரும் அறிந்ததே. ஆனால் மோடியின் அரசு எந்த அளவிற்கு சங்கின் சித்தாந்தத்தைச் செயல்படுத்துகிறது? இதோ இங்கே ஒரு சின்ன அலசல்.

மோடி அரசின் செயல் பாடுகளை நாம் அறிய வேண்டும் என்றால் கோல் வால்கர் என்பவரின் எண்ண ஓட்டத்தைப் பற்றி நாம் தெரிந்து கொள்ளவேண்டும். கோல்வால்கர்தான் சங்க் அமைப்பிற்கு 1939-லிருந்து 1973 வரை (33 ஆண்டுகள்) தலைமை தாங்கினார். "Bunch of Thoughts" என்ற 38 கட்டுரைகள் கொண்ட தொகுப்பு, கோல்வால்கரின் முழு எண்ணவோட்டத்தையும் சங்கின் இந்துத்வா சித்தாந்தம் பற்றியும் தெளிவாக எடுத்துக் கூறுகிறது.

1939-இல் வெளிவந்த "We or Our Nationhood Defined" என்னும் கட்டுரையில் கோல்வால்கர் 'இந்து தேசம் (Hindu Nationhood)" என்பதை வரையறுக்கிறார். "இந்துஸ்தான்" அல்லது "பாரதம்" என்று அழைக்கப்படும் நிலபரப்பு (இமய மலைக்கும் இந்தியப் பெருங்கடலுக்கும் இடைப்பட்ட நிலம்), இந்து இனம், இந்து மதம், இந்துப் பண்பாடு மற்றும் சமஸ்கிருதம் மொழி ஆகியவை வாயிலாக ஒரே நாடாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது என்றார்.

ஆயிரமாயிரம் ஆண்டுகள் தழைத்த இந்த பாரத தேசம், முகலாயர்கள் மற்றும் பிரித்தானியர்கள் ஆட்சியால், கடந்த 1000 ஆண்டுகளின் போது துண்டாடப்பட்டது என்கிறார் கோல்வால்கர். பாரத தேசத்திலிருந்து தான் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பர்மா ஆகிய நாடுகள் உருவாகின. காஷ்மீரின் ஒரு பகுதியும் பிரித்து எடுக்கப்பட்டது. மேலும் கோல்வால்கரை பொருத்தமட்டில், இஸ்லாமியர்கள், கிறித்துவர்கள், கம்யூனிஸ்ட்கள் ஆகிய மூன்று பிரிவினரும் இந்தியாவின் உள்நாட்டு அச்சுறுத்தல்கள் ஆவர். இந்த மூன்று பிரிவினரின் கோட்பாடுகளும் பாரதத்தின் வெளியே உருவானவை என்றும் ஆதலால் நம்முடைய தேசிய நீரோட்டத்திற்கு அவை உகந்தவை அல்ல என்றும் கருதினார்.

கோல்வால்கர், 1962-இல் நடந்த தேசிய ஒருமைப்பாட்டு ஆணையத்திற்கு அனுப்பியிருந்த பரிந்துரையில் நாட்டில் நிலவும் பல்வேறுவிதமான பிரிவினைவாதங்களை நிரந்தரமாக எதிர் கொள்ளக் கீழேயுள்ள பத்து வழிமுறைகளை விவரித்து இருந்தார்.

**(1)** சாதி மதம் கடந்து ஒவ்வொருவரும் பாரதத்தை வலுவாகவும், செல்வமுள்ளதாகவும் ஆக்குவதற்குத் தம்மைத்தாமே அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும்.

**(2)** இந்து அல்லாதவர்கள், இந்து மரபுகளுக்கு மரியாதையும் மதிப்பும் அளிக்க வேண்டும். மேலும் அவர்கள், தங்களை இந்துமதப் பாரம்பரியத்துடனும் பழக்கவழக்கங்களோடும் அடையாளம் காணவேண்டும்.

**(3)** தேசத்தில் உள்ள அனைவரும் சமமாகக் கருதப்பட வேண்டும் என்பதால் சாதி மத அடிப்படையில் எந்த குழுவும் நிதியுதவி, இடஒதுக்கீடு போன்ற சிறப்பு சலுகைகளைக் கோரக்கூடாது.

**(4)** பாரதத்தின் பெரும்பாலான மக்கள் பேசும் மொழி இந்தி என்பதால் அதுவே நாட்டின் பொது மொழியாக வேண்டும்.

**(5)** இந்திய நாட்டில் ஒற்றையாட்சி அமைப்பு முறையை ("Unitary State") நிறுவ வேண்டும். இப்போது நாம் கடைப்பிடித்துக் கொண்டிருக்கும் கூட்டாட்சி அமைப்பு ("Federal System"), பிரிவினை வாதத்தைத் தூண்டும். அதனால் நம் அரசியல் சட்டத்தில் மாற்றங்கள் செய்து ஒற்றையாட்சி அமைப்பு முறையை அமல் படுத்தவேண்டும்.

**(6)** இந்து வழிபாட்டுத் தலங்களுக்கும், வழிமுறைகளுக்கும் ஊறுவிளைவிப்பது, மாட்டைக் கொல்வது, சட்டத்திற்குப் புறம்பாகப் பொது அல்லது தனியார் இடங்களில் மசூதிகள் கட்டுவது, அனுமதியின்றி ஊர்வலம் போவது போன்ற செயல்களுக்குக் கடுமையான தண்டனை அளிக்க வேண்டும்

**(7)** இந்து மதம் சார்ந்த ஒவ்வொருவருக்கும் இந்த தேசம்தான் தர்ம பூமியாகும். அதனால் இந்து என்பவர் இந்த தேசத்திற்கு எப்போதுமே விசுவாசமாக இருப்பார் என்பதால் ஓர் இந்துவை "Communal" என்று கூறி மற்ற மதத்தவரோடு ஒப்பிடக்கூடாது.

**(8)** இந்துக்கள் வேறு மதங்களுக்கு மாற்றுப்படுவதை முற்றிலுமாகத் தடுத்து நிறுத்தவேண்டும்.

**(9)** சமூகத்தில் இந்துக்களின் கவுரவமான இடத்தைப் பாதுக்காக்க ஒரு கொள்கை வரையறுக்கப்பட வேண்டும்; மேலும் அந்தக் கொள்கையில் பிற மதத்தவர் இந்துக்களோடு ஒருங்கிணைந்து வாழ, பின்பற்ற வேண்டிய வழிமுறைகளும் இருக்க வேண்டும்.

**(10)** தேசிய ஒருமைப்பாட்டு ஆணையத்தை மூட வேண்டும்.

மேலேயுள்ள 10 வழிமுறைகளையும் பார்க்கும்போது, மோடி அரசாங்கம் கோல்வால்கரின் கோட்பாடுகளையே தன்னுடைய கோட்பாடுகளாக ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பது தெளிவாகிறது.

குறிப்பாக, ஒற்றையாட்சி அமைப்பு முறைக்கு ஏதுவாக பல கொள்கை/நிர்வாக முடிவுகளை எடுத்து வருகிறது, மோடியின் அரசு.

"ஒரே நாடு, ஒரே தேர்தல்", "ஒரே நாடு, ஒரே மொழி", "ஒரே நாடு, ஒரே வரி", "ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை", "ஒரே நாடு, ஒரே கல்விக்கொள்கை", "ஒரே நாடு, ஒரே நுழைவுத் தேர்வு", "ஒரே நாடு, ஒரே மின் கட்டமைப்பு", போன்ற ஒவ்வொரு நடவடிக்கையும் 'ஒரே நாடு, ஒரே அரசமைப்பு, ஒரே சட்டமன்றம், ஒரே நிர்வாகம்" என்னும் திசையை நோக்கி இந்தியாவை எடுத்துச் செல்வதற்கான சூழ்ச்சியேயாகும்.

இதைவிடக் கொடுமை என்னவென்றால், 2014-இல் ஆட்சியமைத்த மோடி அரசு, இதுவரை தேசிய ஒருமைப்பாடு ஆணையத்தை ஒரு முறைக்கூடக் கூட்டவில்லை என்பது தான் (வழிமுறை-10)!

மோடி அரசு, சங்கின் கைப்பாவை என்பதற்கும் இந்திய நாட்டை இந்து தேசமாக மாற்ற வேலைகள் செய்வனே நடந்துவருகின்றன என்பதற்கும், மோடிதான் கோல்வால்கரின் முகமூடி என்பதற்கும், இதைவிட வேறு சான்று என்ன வேண்டும்?

●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,